02.09.2025
OS. No.250/2019
**வா.சா.1 –** திருமதி.ரேவதி, க/பெ.திரு.லட்சுமி நாராயணன்

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப் பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறது.)

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–</u>**

எங்களுக்காக ஏற்கனவே வழக்கைத் தாக்கல் செய்த முந்தைய வழக்கறிஞர் கதிரேசன் என்பவர் நாங்கள் சொல்லாத விஷயங்களை எல்லாம் அசல் வழக்கில் சொல்லி இருக்கிறார் என்பதை தற்போதைய வழக்கறிஞரிடம் தெரிவிக்கவில்லை. ஏ ஷெட்யூல் சொத்தை என் தகப்பனார் தான் காலி மனையாக கிரயம் பெற்று அவர் சுய வருமானத்தைக் கொண்டு அதில் வீடு கட்டினார் என்றும், டி ஷெட்யூல் சொத்தில் கண்ட டெபாசிட் பணங்களை என் தகப்பனார் தான் செய்தார் என்றும், நான் சொல்லாத விவரத்தை என் முந்தைய வழக்கறிஞர் சொல்லி இருக்கிறார் என்பதை தற்போதைய வழக்கங்களிடம் தெரிவிக்கவில்லை. நாங்கள் தெரிவித்த விவரங்களை தான் எங்கள் முந்தைய வழக்கறிஞர் வழக்கில் குறிப்பிட்டு இருக்கிறார் என்றும், தற்போது வழக்கிற்காக நான் மறுக்கிறேன் என்றால் சரியல்ல. முந்தைய வழக்கறிஞர் நான் தெரிவிக்காத சங்கதிகளை எல்லாம் அசல் வழக்கில் தெரிவித்தார் என்பது தொடர்பாக ஏதாவது நடவடிக்கை எடுத்தேனா என்றால் பார் கவுன்சிலுக்கு புகார் அனுப்பி இருக்கிறேன். அந்த புகார் மனு தற்போது கைவசம் இல்லை. திருச்சியில் உள்ள வழக்கறிஞர் சங்கத்தில் தான் நான் அந்த புகாரை தெரிவித்தேன். வழக்கறிஞர் சங்கத்தில் உள்ளவர்கள் சமாதானம்

WW ade ooo ooo ooo y

பேசி விட்டார்கள். அவர்கள் தான் வேறு வழக்கறிஞரை பார்க்கச் சொன்னதால் நான் தற்போது வழக்கறிஞரை நியமித்தேன். தற்போதைய வழக்கறிஞர் மூலமாக ஏற்கனவே ஏற்பட்ட தவறை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. ஏ ஷெட்யூல் சொத்தான வீடு கட்டி மூன்று வருடத்தில் நான் பிறந்தேன். நான் 1983 ஆம் வருடம் பிறந்தேன். வழக்குரையில் கண்ட ஏ ஷெட்யூல் சொத்தான வீட்டை எனது தகப்பனார் அவரது சுய வருமானத்தைக் கொண்டு காலி மனையாக கிரயம் பெற்று பின்னர் அதில் வீடு கட்டினார் என்றும், நான் வழக்குரையில் சொல்லி இருக்கக்கூடிய அது தொடர்புடைய உண்மையான சங்கதிகளை தான் வழக்குரையில் சொல்லி இருக்கிறேன் என்றால் சரியல்ல. டி ஷெட்யூல் சொத்தான வைப்பீடு என் தகப்பனாரால் செய்யப்பட்டது ஆகும். நான் தாக்கல் செய்த சத்திய பிரமாண வாக்குமூலம் பத்தி 5 ல் டி ஷெட்யூல் சொத்தான வங்கி வைப்பீடு தொகையான மேற்படி சிவசுப்பிரமணியனும் நானும் சேர்ந்து சம்பாதித்துக் கொண்டும் வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டும் அவர்களுக்கு சொந்தமாகியும் இருந்து வந்த சொத்தாகும் என்று சொல்லி இருக்கிறேன் என்றால் அது தவறானதாகும். ஏ ஷெட்யூல் சொத்து எனது தகப்பனார் தனது சுய வருமானத்தைக் கொண்டு கிரையம் வாங்கியது என்றும், அது வாங்கப்பட்டதற்கு நானும் சேர்ந்து சம்பாதித்து கொடுத்ததாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கிலும் சத்திய பிரமாண வாக்குமூலத்திலும் நான் சம்பாதித்துக் கொடுத்த பணத்தை வைத்து என் தகப்பனார் பின்னிட்டு கூடுதல் கட்டுமானங்கள் கட்டினார் என்பதை குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். என் திருமணத்திற்கான செலவுகள் அனைத்தும் என் தகப்பனார் செய்தார். என் அம்மா வீட்டு குடித்தனமாக இருந்தார் என்றும், சுயதொழில் செய்தார் என்றும் கூறியிருந்தாலும் என்ன தொழில் செய்தார் என்பதையும், எவ்வளவு வருமானம் ஈட்டினார் என்பதையும் குறிப்பிட்டு சொல்லவில்லை. என் திருமணம் 2011 ஆம் வருடம் நடைபெற்றது. 2015 ஆம் வருடம் வரை நானும் என் கணவரும் சேர்ந்து வாழ்ந்தோம். 2011 முதல் 2015 வரை நான் தொடர்ச்சியாக என் கணவருடன் சேர்ந்து வாழவில்லை. எனது சகோதரர் கார்த்திகேயன் பெங்களூரில் உள்ள மென்பொருள் நிறுவனத்தில் வேலை பார்த்து வந்தார். என் தகப்பனாருக்கு ஓய்வூதியம் கிடையாது. என் தகப்பனாருக்கு செலவுக்கு பணத்தை என் சகோதரர்தான் கொடுத்தார் என்றால் இல்லை. என் சகோதரன் தன்னுடைய வங்கி கடன் அட்டையை என் வசம் கொடுத்து இருந்தார். அதை வைத்து வீட்டிற்கு தேவையான மளிகை பொருட்கள் மட்டும் நான் வாங்கிக் கொடுப்பேன். 2005 ஆம் வருடத்தில் இருந்து 2011 ஆம் வருடம் வரை ஒவ்வொரு வருடமும் ரூபாய் ஆறு லட்சம் வரை நான் அந்த வங்கி கடன் அட்டையை பயன்படுத்தி செலவுகள் செய்து இருக்கிறேன் என்றால் இல்லை. என் சகோதரர் எனக்கு டிவிஎஸ் ஸ்கூட்டி இருசக்கர வாகனம் வாங்கி கொடுத்தார். 2005 ஆம் வருடத்தில் இருந்து 2011 ஆம் வருடம் வரை சத்திரத்தில் உள்ள விசாலம் எனப்படும் கல்வி நிறுவனத்தில் நான் வேலை பார்த்திருக்கிறேன். 2007 ஆம் வருடம் வரை அங்கு வேலை பார்த்தேன். அதன் பிறகு ஆரி ஒர்க் எனப்படும் பிளவுஸ் வேலை செய்து வந்தேன்.

அழகு கலை நிலையத்திலும் பணியாற்றி இருக்கிறேன். ஜோதிட கலையில் தங்கப்பதக்கம் வாங்கி இருக்கிறேன். என்னுடைய வேலைகள் மூலமாக எனக்கு அதிகபட்சமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 8000 முதல் 10 ஆயிரம் வரை வருமானம் கிடைக்கும். எனக்கு தேவையான செலவுகள் அனைத்தையும் என் தகப்பனார் செய்து வந்ததால் நான் எனது வருமானத்தை சேமித்து வைத்தேன். 2007 ல் எனது தகப்பனாருக்கு காலில் முறிவு ஏற்பட்டது. அதற்கான சிகிச்சைக்கான செலவை எனது தம்பி தான் செய்தார் என்றால் இல்லை. மருத்துவமனையில் சிகிச்சை மட்டும் தான் சேர்த்தார். செலவுகள் அவர் செய்யவில்லை. எனது கணவருடன் நான் சரிவர குடும்பம் நடத்தாமல் அவருடன் சண்டை சச்சரவுகள் செய்து எனது கணவரை விட்டு பிரிந்து வெகு நாட்களாக பெற்றோருடன் தான் வசித்து வந்தேன் என்றால் எனது பங்கை பிரித்து தர பிரதிவாதியிடம் கேட்டதற்கு அவர் கொடுக்காத காரணத்தினால் தான் இந்த பிரச்சனை ஏற்பட்டது. எனது கணவர் என் வீட்டில் இருந்து சொத்தில் பங்கு வாங்கி வர வேண்டும் என்று என்னை அனுப்பி விட்டார். என் திருமணத்தின் போது எனக்கு 43 பவுன் தங்க நகைகள் என் அப்பா போட்டார். அந்த நகைகள் அனைத்தையும் என் கணவர் வீட்டில் இருந்து நான் வரும்போது எடுத்து வந்து விட்டேன். நானும் எனது கணவரும் காதல் திருமணம் செய்தோமா என்றால் ஏற்கனவே எனக்கு ஒரு திருமணம் நிச்சயிக்கப்பட்டது. அந்த திருமணம் நடைபெறாத காரணத்தினால் என்னுடன் பணியாற்றிய நபரே என்னை திருமணம் செய்ய சம்மதித்ததால்

Vapaa

பெற்றோர் விருப்பத்துடன் எங்கள் திருமணம் நடைபெற்றது. என் தகப்பனாரை நான் அடித்து துன்புறுத்தி அவரது நகைகளை வங்கியில் இருந்து எடுத்து அந்த நகைகளை விற்று என்னுடைய வங்கிக் கணக்கில் அந்த தொகையை சேர்த்து விட்டேன் என்று திருவெறும்பூர் காவல் நிலையத்தில் என் மீது புகார் கொடுக்கப்பட்டு அதன் அடிப்படையில் குற்ற எண் 70/2020 என ஒரு குற்ற வழக்கு என் மீது பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் ஆமாம். ஆனால் தப்பாக பொய் வழக்கு போட்டுவிட்டார்கள். அந்த வழக்கில் என்னை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தி பின்னர் நான் பிணையில் வந்தேன் என்று சொன்னால் சரிதான். தற்போது வரை அந்த வழக்கில் நான் பிணையில் தான் இருந்து வருகிறேன். என் தகப்பனார் எனது தாயாருக்கு சொந்தமான தங்க நகைகள் மற்றும் அவர் பொறுப்பில் இருந்த தங்க நகைகள் அனைத்தையும் திருச்சி கைலாஷ் நகரில் உள்ள ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா கிளையில் பாதுகாப்பு பெட்டகத்தில் வைத்திருந்தார். என் தகப்பனார் வங்கியில் சேப்டி லாக்கரில் 50 பவுன் தங்க நகைகள் வைத்திருந்தார். வங்கியில் என் தகப்பனாருக்கு சொந்தமான தங்க நகைகள் சுமார் 75 பவுன் மற்றும் என் சகோதரருக்கு சொந்தமான 18 பவுன் தங்க நகை ஆக மொத்தம் 93 பவுன் தங்க நகைகள் இருந்தது என்றும் அதை தற்போது இல்லை என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வங்கி லாக்கரை பயன்படுத்துவதற்கு என் தகப்பனாரின் சம்மத கடிதத்தைப் பெற்றுக் கொண்டு சென்று நான் பயன்படுத்தினேனா அல்லது என் தகப்பனாரை

அழைத்துக் கொண்டு சென்று வங்கி லாக்கரை பயன்படுத்தினேனா என்றால் என் தகப்பனார் கால் முடியாதவர் என்பதால் அவர் தான் என்னை அழைத்துச் செல்வார். நான் எனக்குச் சொந்தமான ஸ்கூட்டியில் அவரை அழைத்துச் செல்வேன். என் தங்கைக்கு என் தகப்பனார் 50 பவுன் தங்க நகைகள் வங்கியில் வைத்திருந்ததை எடுத்துக் கொடுத்தார். எனக்கு எதுவும் கொடுக்கவில்லை. அந்த 50 பவுன் தங்க நகைகளையும் லலிதா ஜுவல்லரியில் நான் விற்பனை செய்து இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கிளையில் என் தங்கை பெயரிலும் என் பெயரிலும் சேர்ந்து கூட்டாக வைப்பீடு செய்யப்பட்டு இருக்கிறது. 2019 ஆம் வருடம் அந்த தங்க நகைகள் ரூபாய் பத்து லட்சத்திற்கு விற்கப்பட்டது. எனக்கு போட்ட 20 பவுன் நகைகளை எனது தகப்பனார் என்னிடமிருந்து வாங்கி என் அண்ணன் மகனுக்கு பிறந்த நாளின்போது போட்டுவிட்டார். மீதி 20 பவுன் நகைகளை விற்று மலைகோவில் கிளை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் வைப்பீடு செய்துவிட்டேன். அந்த அக்கவுண்ட் தற்போது முடக்கப்பட்டுள்ளது. எனது தகப்பனாரின் லாக்கரில் இருந்த நகைகள் அனைத்தையும் எடுத்து அந்த நகைகளை நான் லலிதா ஜுவல்லரியில் விற்பனை செய்து அதே ஜுவல்லரியில் புது நகைகள் வாங்கி 15 நாட்கள் கழித்து அந்த நகைகளை மீண்டும் அதே லலிதா ஜுவல்லரியில் விற்பனை செய்து அதில் கிடைத்த தொகையை வைத்து தான் என் சகோதரி பெயரிலும் என் பெயரிலும் வைப்பீடு செய்தேன் என்றால் சரிதான். ஆனால் என் தகப்பனாரை நான் மிரட்டவில்லை. காவல்துறையினர் முறையாக விசாரணை செய்து அந்த வைப்பீடு தொகையை Seize செய்து விட்டார்கள்

என்றால் Lock செய்துவிட்டார்கள். என் தகப்பனாருடன் நானும் என் சகோதரி மட்டும்தான் வசித்து வந்தோம். வேறு யாரும் வசிக்கவில்லை. எனது தகப்பனார் என்னுடன் வசித்த போது அவரை அடித்து துன்புறுத்தி 11.04.2019 அன்று என் சகோதரன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட போது தன்னை காப்பாற்ற வேண்டும் என்று முறையிட்டதால் அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் துணையுடன் விசாரித்த போது நான் தான் அவரை தாக்கியதாக தெரிந்து கொண்டார் என்றால் சரியல்ல. அதன் பின்னர் காவல்துறையினர் உதவியுடன் என் தகப்பனாரை என் சகோதரன் மீட்டி அப்பல்லோ மருத்துவமனையில் 11 நாட்கள் சிகிச்சையில் வைத்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த சிகிச்சை முடிந்து என் தகப்பனார் வந்த பிறகு தான் என் மீது குற்ற வழக்கு பதிவு செய்து என்னை சிறைக்கு அனுப்பினார்கள் என்றால் சரியல்ல. எனக்கு பேங்க் ஆப் இந்தியாவில் வங்கிக் கணக்கு உள்ளது. அந்த வங்கிக் கணக்கில் 2019 ஆம் வருடம் ரூபாய் 10 லட்சம் ரொக்கமாக வைப்பீடு செய்தேன் என்றால் சரிதான். அந்தப் பணத்தை சிறுக சிறுக சேமித்து வைத்து வைப்பீடு செய்தேன். எனக்கு எந்தவித வருமானமும் கிடையாது என்றும் என் அப்பாவிற்கு சொந்தமான நகைகளை விற்ற பணத்தை தான் நான் வங்கியில் வைப்பீடு செய்தேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த வேலைக்கும் செல்லவில்லை என்றும் நான் வீட்டில் தான் வசித்து வந்தேன் என்றும் எனக்கு எந்த வருமானமும் கிடையாது என்று சொன்னால் சரியல்ல. 2019 ஆம் வருடத்திற்கு முன்பு வரை நான் வங்கியில் எந்த பணமும் வைத்து செய்தது கிடையாது. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்தில்

பிரதிவாதிக்கு 08.05.2019 அன்று தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றால் அது போலி செட்டில்மெண்ட் ஆகும். என் தகப்பனார் சுய சம்பாத்திய சொத்தை அவரது விருப்பப்படி தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்திருக்கிறார் என்றும், நான் எதன் அடிப்படையில் போலி செட்டில்மெண்ட் என்று கூறுகிறேன் என்றால் என் அப்பா எங்கு இருக்கிறார் என்பது கூட அவருக்கு தெரியாத நிலையில் அந்த ஆவணம் எழுதி வாங்கப்பட்டதால் அவ்வாறு கூறுகிறேன். திருச்சியில் வசித்து வந்தால் என் தகப்பனாரின் உயிருக்கு என்னால் பாதுகாப்பு இருக்காது என்பதால் தான் என் சகோதரர் அவரை பெங்களூருக்கு அழைத்துச் சென்று விட்டார் என்றால் சரியல்ல. டி ஷெட்யூல் சொத்தில் கண்ட வைப்பீடு தொகை அனைத்தையும், என் அப்பா உயிருடன் இருந்த காலத்தில் அவரே முழுமையாக பணம் முழுவதையும் வங்கியிலிருந்து எடுத்து விட்டார் என்றால் சரியல்ல. என் அப்பாவை அழைத்துச் சென்று என் அண்ணன் வாங்கி விட்டதாக வங்கி மேலாளர் தெரிவித்தார். இந்த விவரத்தை வழக்குரையிலும் சத்தியபிரமாண வாக்குமூலத்திலும் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஏ ஷெட்யூல் சொத்தை எனது அண்ணன் மூன்றாம் தரப்பினருக்கு விற்பனை செய்துவிட்டார் என்றும் தற்போது மூன்றாம் தரப்பினர் வசம் அனுபவம் இருந்து வருகிறது என்று சொன்னால் வீடு இடிந்து கிடக்கிறது. அதை கிரையம் வாங்கிய பால்ராஜ் வசம் தான் சொத்து உள்ளது. என் தகப்பனார் உயிருடன் இருந்த காலத்திலேயே ஏ ஷெட்யூல் மற்றும் டி ஷெட்யூல் சொத்துக்களை விற்பனை செய்து விட்டதால் அவற்றை பொறுத்து நான் கேட்கும் பரிகாரம்

எனக்கு கிடைக்கத்தக்கதாக இல்லை என்றால் சரியல்ல. தாவா பி ஷெட்யூல் மற்றும் சி ஷெட்யூல் சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை செய்துள்ள பிரதிவாதி சம்மதிக்கிறார் என்றால் அதை நான் ஏற்றுக்கொள்கிறேன். சத்தியபிரமாண வாக்குமூலம் பத்தி 7 முதல் 19 வரையில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால் சரியல்ல. அவை அனைத்தும் வழக்குக்காக எங்களால் ஜோடிக்கப்பட்டவை என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி எதிர்வழக்குரையில் குறிப்பிட்டவாறு பகுதியாக தீர்ப்பாணை பிறப்பிப்பது ஆட்சேபனை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை:-</u>** இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.